விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 168 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 22 திங்கட்கிழமை (05.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### 10 ரூபாயினால்
# பாணின் விலை குறைகின்றது

(கொழும்பு)

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் 450 கிராம் எடையுடைய பாணின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

# டொலரின் பெறுமதி குறைந்தாலும் மக்கள் பட்டினியில் வாழ்ந்து வருகின்றனர்

### ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



(கொழும்பு)

அமெரிக்க டொலரின் பெறுமதி குறைந்தாலும் நாடு முழுவதிலும் மக்கள் பட்டினியில் வாழ்ந்து வருவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

ஒரு அமெரிக்க டொலர் சுமார் 400 ரூபாவாக காணப்பட்ட காலத்திலும் பொருட்களின் விலைகள் இவ்வளவு உயர்வடைந்திருக்கவில்லை என ஜே.வி.பி.யின் பொதுச் செய 11

### திருடர்களை நம்பியிருக்கும் தலைவரால்
# திருடர்களை எப்போதும் பிடிக்கவே முடியாது



### ரணில் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

திருடர்களை நம்பியிருக்கும் தலைவரால் திருடர்களை எப்போதும் பிடிக்கவே முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். *(11ஆம் பக்கம் பார்க்க)*



மத நல்லிணக்கத்தை
# சீர்குலைப்பவர்களை கண்டறியுங்கள்

ஜனாதிபதி உத்தரவு

3 ஆம் பக்கம் பார்க்க

# மீண்டும் ஒரு போருக்கு வழி அமைக்காதீர்



தமிழ்த் தலைவர்களிடம் அமைச்சர் அலி சப்ரி

9 ஆம் பக்கம் பார்க்க

# கஜேந்திரகுமார் விவகாரம் அறிக்கை சமர்ப்பிக்குக

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் பொலிஸாருக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற வாக்குவாதம் தொடர்பில் உடனடியாக அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு 11

# பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுக்க நடவடிக்கை

### ஜனாதிபதி ரணில் உறுதி

(நுவரெலியா)

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்கான அடுத்தகட்ட செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நாட்டின் வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்களில், அவை 11

# துணிவு இருந்தால் தேர்தலை நடத்துங்கள் மக்கள் நிச்சயம் பதிலடி கொடுப்பார்கள்

### ஜே.வி.பி எம்.பி விஜித ஹேரத்

(கொழும்பு)

தேர்தலை நடத்தாமல் எந்த அரசியல் கட்சிக்கும் 50 சதவீத பலத்தை பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு குறிப்பிட முடியும். தேர்தலை நடத்தாமல் மக்களாணையை மதிப்பிட முடியாது. தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் நிச்சயம் பதிலடி கொடுப்பார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையற்ற வகையில் பிற்போடப்பட்டுள்ளமைக்கு எதிராக எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் பிறிதொரு அடிப்படை உரிமை மீறல் வழக்கு 11

### 31 மாணவர்கள்
# யாழ்.பல்கலைக்குள் நுழையத் தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் 31 மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து

எமது பாடசாலையில் மகத்துவமான சேவையாற்றி
ஓய்வுபெறும் சிரேஷ்ட ஆசிரியர்

**திருமதி உமாரதி திருச்சபேசன்**
விசேட பயிற்சி (ஆரம்பக் கல்வி)

அவர்களுக்கு மணிவிழா வாழ்த்தினைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் மகிழ்வாகவும்
சிறப்பாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயம்

சேவை விபரம்
- யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் 1989.11.29 - 1993.03.07
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 1993.03.08 - 1994.12.31
- யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் 1995.01.01 - 1998.08.31
- யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை 1998.09.01 - 2010.04.30
- யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயம் 2010.05.01 - 2023.06.05



(C-6671)


# இராணுவப் பலத்தையே ஜனாதிபதி விரும்புகின்றார்

## ஆங்கில ஊடகம் செய்தி வெளியீடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தை பலப்படுத்தவும், பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் விரும்புகிறார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்திட்டத்தின் பரந்தளவிலான எண்ணக்கருக்கள் ஏற்கனவே அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

சட்ட வரைவை உருவாக்க சட்ட வரைவாளர், அழைக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கான கூடுதல் செயல்பாடுகளாக பாதுகாப்பு செயலாளருடன் இணைந்து பணியாற்றுதல், ஆயுதப்படைகளுக்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்குவதில் உதவுதல் உள்ளிட்ட எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு உத்திகளை வகுக்க வேண்டும் என்பனவும் அடங்குகின்றன.

அத்துடன், ஆயுதப் படைகளின் ஒருங்கிணைந்த கூட்டுப் பயிற்சிக்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் ஆயுதப் படைகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான கொள்கைகளை வகுத்தல் என்பனவும் குறித்த செயற்பாடுகளில் உள்வாங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு படைகளின் பிரதானி என்பது ஆயுதப்படைகளில் மிக முக்கியமான மற்றும் மிக உயர்ந்த நியமனமாகும்.

ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாக இருக்கும் ஜனாதிபதி, இந்த பதவிக்காக இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை ஆகியவற்றில் ஒருவரை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார் என்று செய்தி வெளியிட்டுள்ளது. (ம)

# வறுமையில் வாடும் மக்களுக்காக 200 பில்லியன் நிதி ஒதுக்கீடு

வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அடுத்த ஆண்டுக்கான, பாதீட்டில் சமூக நலத் திட்டங்களுக்காக கூடுதலாக 200 பில்லியன் நிதி ஒதுக்கப்படும் என திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக இந்த ஆண்டுக்குள் உலக வங்கியிடமிருந்து, 700 மில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான இரண்டு பெரிய கடன் உதவிகள் எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கியின் நிதியானது, குறைந்த வருமானம் பெறும் மூன்று மில்லியன் குடும்பங்களுக்கு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு நிதியுதவி அளித்தல் உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக வழங்கப்பட உள்ளதாக திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# திருஞானசம்பந்தர் விழா

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை, உயர்பட்டப்படிப்புக்கள் பீட சைவசித்தாந்தத் முதுமாணி கற்கை அணி VII இணைந்து நடாத்தும் திருஞானசம்பந்தர் விழாவானது இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா அவர்களும் கௌரவ விருந்தினராக உயர்பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் அவர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நிகழ்வில் பேராசிரியர் ச.விநாயகமூர்த்தி (ஓய்வுநிலை ஆங்கிலப் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்கள் "திருநெறிய தமிழ் வல்லவர்" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றவுள்ளார். தமிழருவி த. சிவகுமாரன் (அமைப்பாளர் வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்கம்) தலைமையில் "திருஞானசம்பந்தர் பதிகங்களில் பெரிதும் விஞ்சி நிற்பது இலக்கியச் சுவையே! இறையுணர்வே!" என்னும் பட்டிமண்டபம் நடைபெறவுள்ளது. (ம)


# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
விலங்கியல் துறையின் முன்னைநாள்
வணக்கத்துக்குரிய அருட்தந்தை
**பேராசிரியர்**
**G.F ராஜேந்திரம் S.J**

அடிகளார் 01.06.2023 அன்று
வியாழக்கிழமை கர்த்தருள்
நித்திரையடைந்த செய்தி அறிந்து
துயரடைவதுடன் அன்னாரின்
பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
ஆண்டவனின் திருப்பாதங்களில்
அமைதிபெற பிரார்த்தின்றோம்.

**துறைத்தலைவர் மற்றும் ஊழியர்கள்**
**விலங்கியல்துறை - விஞ்ஞானபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(15846)


# குடிவரவு திணைக்களத்தில் சடலம் ஒன்று மீட்பு

(கொழும்பு)

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு திணைக்களத்தின் கட்டடமொன்றின் மேல் மாடியில் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

73 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் ஹோகந்தர பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் அந்த அலுவலகத்தில் துப்புரவு தொழிலாளியாக பணியாற்றியவர் எனவும் தெரியவந்துள்ளது.

இராணுவ அதிகாரி ஒருவர் சேவை நோக்கத்திற்காக நேற்று காலை கட்டடத்தின் மேல் தளத்தில் உள்ள துப்புரவுப் பிரிவுக்கு சென்று கொண்டிருந்த போது, அதன் முன் நாற்காலியில் இந்த நபர் இறந்து கிடப்பதைக் கண்டுள்ளார்.

இதன்படி, தலங்கம பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)


# 21 ஆவது ஆண்டு நினைவு!



எங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின்
முன்னாள் தலைவரும், "உடுப்பிட்டி சிங்கம்",
"நல்லூர் சிவா", "சிம்மக்குரலோன்" என
அன்போடு தமிழ்ப் பேசும் மக்களால்
மட்டுமல்ல அனைவராலும் போற்றப்பட்ட

**அமரர் முருகேசு சிவசிதம்பரம்**

பிறப்பு 20.07.1923 இறப்பு 05.06.2002

அவர்களை என்றும் மறவோம்!

(C-6672)

தங்க. முகுந்தன் (TULF) - மூளாய் 074 049 4629

# கண்ணீர் அஞ்சலி



தமிழரசுக் கட்சியின் முன்னாள் நல்லூர்
பிரதேச சபை உறுப்பினர் நண்பன்
சுரேஷ்குமாரின் அன்புத்தாயாரும்,
தம்பி நிரோஷனின் அம்மம்மாவும் ஆகிய

**திருமதி நல்லம்மா சண்முகலிங்கம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்கள்! அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 19.11.1941 மறைவு 04.06.2023

(C-6672)

தங்க. முகுந்தன் (TULF) - மூளாய் 074 049 4629


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத நல்லிணக்கத்தை சீர்குலைப்பவர்களை கண்டறியுமாறு முப்படைகளுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

**மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயற்படும் குழுக்களையும், அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதையும் விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறு முப்படைகளின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.**



நாட்டில் ஏற்பட்டுள்ள மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான சம்பவங்கள் தற்செயலானவை அல்ல எனவும், மாறாக திட்டமிட்ட வகையிலேயே முன்னெடுக்கப்படுவதாகவும் தேசிய புலனாய்வு பிரிவு ஜனாதிபதிக்கு தகவல் வழங்கியிருந்தது.

மேலும், வரலாற்றில் எந்தவொரு காலகட்டத்திலும் நாடு எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியினால் மக்களும் நாடும் பாதிக்கப்பட்டு தற்போது முன்னோக்கி நகர்கின்ற இன்றைய சூழ்நிலையில், மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து, இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி, நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு கொண்டுசெல்லும் வகையில் சில குழுக்கள் திட்டமிட்டு செயற்படுவதாகவும் அந்த புலனாய்வு தகவல்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு படைகளின் பிரதானிகளை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது. இதனபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறுதெரிவித்தார். (நி)

## இலங்கை கடற்கரையில் இராட்சத கடல் ஆமை

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய கடல் ஆமை இனமாகக் கருதப்படும் ஆமை ஒன்று நேற்று முன்தினம் பாணந்துறை கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த ஆமை 6 - 7 அடி நீளமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இலங்கை , அந்தமான் மற்றும் நிக்கோபார் போன்ற வெப்பமண்டல தீவுகளின் கடற்கரைகளுக்கு இந்த கடல் ஆமைகள் முட்டையிடுவதற்காக மட்டுமே செல்வது வழக்கம்.மேலும் குறித்த கடல் ஆமைகள் 1970 முதல் அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் உள்ளன.(நி)

## தேநீர் உணவுகளின் விலையை குறைத்து வர்த்தமானி வெளியிட வேண்டும்

### சிற்றுணவக உரிமையாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

சமையல் எரிவாயு விலை குறைப்பிற்கு இணையாக உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கான, முறைமை ஒன்றை முன்வைக்குமாறு அரசாங்கத்திடம் அகில இலங்கை சிற்றுணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த விடயத்தில் அரசாங்கம் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

தேநீரின் விலை, 30 ரூபா என அறிவித்து, வர்த்தமானி அறிவித்தல் வெளியிட வேண்டும்.

அவ்வாறு செய்தால், இலங்கையில் உள்ள சிற்றுணவகங்களில், தேநீரின் விலையை 30 ரூபாவுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (நி)

## 450 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கும் உலக வங்கி

(வோஷிங்டன்)

வருட இறுதிக்குள் 450 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க் உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை அடுத்தே இந்த நிதி உதவியை வழங்க தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில், உலக வங்கியின் நிபந்தனைகளை இலகுவாக்கி 450 மில்லியன் டொலர் நிதி உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்ட நாட்களாக நிதி சந்தையின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைகளை சாதகமான முறைமையின் கீழ் கையாளுதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு வந்தது.

இதன் அடிப்படையில், புள்ளிவிபரங்களுடன் தயாரிக்கப்பட்ட இருதரப்பு திட்ட வரைபு உலக வ்ங்கி பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு நிபந்தனைகளுடன் உலக வங்கியின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தனர்.

இவ்வாறு நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் நிபந்தனைகள் சிலவற்றை இலகுவாக்கி 450 மில்லியன் டொலர் நிதி உதவிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி உதவி வருட இறுதிக்குள் கிடைக்கும் என ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (நி)

## இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்

### நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

எஸ்.எல்.எஸ்தரச் சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாத இரும்பு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழ் பெறப்படாத நிறுவனங்கள் இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பில் தரச்சான்றிதழ் நிறுவனத்துக்கு அறிவித்து, அந்த நிறுவனங்களின் தொழிற்சாலை செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத்துறையுடன் தொடர்புடைய பொருட்கள் தொடர்பில் உரிய தரத்தைப் பேணவேண்டிய தேவையுள்ளது.

இதன் காரணமாக இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழை கட்டாயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

## உத்தேச சட்டமூலத்தை முழுமையாக வாபஸ் பெறுமாறு வலியுறுத்து

### மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அறிக்கை வெளியீடு

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தைத் திருத்தியமைப் பதற்கு நேர்மையாக மேற் கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுடனான கலந்துரையாடல்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், தற்போது முன் மொழியப்பட்டுள்ள சட்ட மூல த்தை முழுமையாக வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதத்தடைச் சட்ட த்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொட ர்பில் கடும் எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் எழுந்த நிலையில், அதுபற்றிய கரிசனைகள் மற்றும் திருத்த முன்மொழிவுகளைத் தமக்கு அனுப்பிவைக்குமாறு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பொதுமக்கள், அரசியல் கட்சி கள், சிவில் சமூகத்தினர் உள் ளிட்ட சகல தரப்பினரிடமும் கோரிக்கைவிடுத்திருந்தார்.

அதற்கமைய உத்தேச பய ங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தொடர்பில் தமது கரிசனைகளையும், அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களையும் உள்ளடக்கி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை யில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 07.05.2023 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
**அமரர்.முருகேசு ஆனந்தராசா**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்
05.06.2023 இன்று திங்கட் கிழமை
அதிகாலை 3.30 மணியளவில் பொலிகண்டி
சின்னக்கடையில் உள்ள அன்னாரது இல்லத்தில்
(பாஸ்கரன் வீடு)நடைபெற்று கீரிமலை புனித
தீர்த்தக் கரையில்அஸ்தி கரைக்கப்படும்.
அதனைத் தொடர்ந்து 07.06.2023
புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
அன்னாரது இல்லத்தில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறவுள்ளது.அத்தருணம் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

(சி-6660)

[illegible]டை, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

திருமதி.ஆ.ஜானகி குடும்பத்தினர்,
திரு.திருமதி.ந.பாஸ்கரசோதி குடும்பத்தினர்,
திருமதி. ஆ. ரூபி குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய கிண்ணப் போட்டி

# இலங்கையில் விளையாட பாகிஸ்தான் மறுப்பு தெரிவிப்பு



இலங்கை ஆசிய கிண்ணப்போட்டிகளை நடத்துவதற்கு முன்வந்ததால் சீற்றமடைந்த பாகிஸ்தானின் கிரிக்கெட் சபை இலங்கையில் ஒருநாள் போட்டிகளில் விளையாட மறுத்துள்ளது.

பாகிஸ்தானில் ஹைபர்மொடல் அடிப்படையில் நான்கு ஆசியகிண்ணப் போட்டிகளை நடத்த வேண்டும் என பாகிஸ்தான் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் அனைத்து போட்டிகளையும் நடத்துவதற்கு இலங்கை முன்வந்துள்ளதை தொடர்ந்து பாகிஸ்தான் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகளிற்கு இடையிலான உறவுகள் பாதிப்படைந்துள்ளன.

இலங்கையில் அடுத்த மாதம் பாகிஸ்தான் சில ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்கான யோசனையை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிராகரித்துள்ளதை தொடர்ந்து இரு நாடுகளினதும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைகளிற்கு இடையிலான உறவு பாதிக்கப்பட்டுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.சி.சி வேர்ல்ட் சம்பியன்சிப்பின் ஒருபகுதியாக அடுத்த மாதம் பாகிஸ்தான் அணி இலங்கையில் இரண்டு டெஸ்ட்போட்டிகளை விளையாட உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் சில ஒருநாள் போட்டிகளை விளையாட் வேண்டும் என இலங்கை வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்கு முதலில் இணங்கிய பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பின்னர் இந்த வேண்டுகோளை நிராகரித்துள்ளது.

செப்டம்பரில் ஆசிய கிண்ணப்போட்டிகளை நடத்த இலங்கை முன்வந்துள்ளமை குறித்து பாகிஸ்தான் அதிருப்தியடைந்துள்ளதை இது வெளிப்படுத்தியுள்ளது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# சி.எஸ்.கே நட்சத்திர வீரர் திருமண பந்தத்தில் இணைந்தார்



திருமணத்திற்காக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இருந்து விலகிய ருதுராஜ் கெய்க்வாட் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார். இவரின் மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரைச் சேர்ந்தவர் ருதுராஜ் கெய்க்வாட். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடும் இவர், தனது அதிரடி ஆட்டம் மூலம் கோடிக்கணக்கான ரசிகர்கள் ஆதரவை பெற்றுள்ளார். சென்னை அணியின் கப்டன் எம்.எஸ். டோனியின் நம்பிக்கைக்குரிய ஒரு வீரராக திகழ்கிறார்.

ஐ.பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக இந்திய அணியில் இடம் கிடைத்தது. 7ஆம் திகதி தொடங்கும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் பேக்அப் தொடக்க வீரராக தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் திருமணம் செய்ய இருப்பதால், கலந்து கொள்ள முடியாது என்று பி.சி.சி.ஐ யிடம் கேட்டுக் கொண்டார். பி.சி.சி.ஐ யும் அனுமதி அளித்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு திருமணம் நடைபெற்றது. உட்கர்ஷா பவார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். உட்கர்ஷாபவார் கிரிக்கட் வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2844

யஸ்விகா




சினோசா




கோபினா




சூர்யதேவ்




விக்ரம்




சந்துன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்கான கொடுப்பனவுகள் நிலுவையில்

(கொழும்பு)

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு 2 பில்லியனுக்கும் அதிகமான நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளதாக, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின், அழகியல் பாடவிதானங்களின், செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான முழுமையான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப்பரீட்சையின் அழகியல் பாடவிதானங்களின், செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஆசிரியர்கள் பங்கேற்பதில், தாக்கம் ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## இலங்கையில் 35 வீதமானோருக்கு உயர் இரத்த அழுத்தம்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

இலங்கையில், 20 வயதிற்கும் மேற்பட்டவர்களில், 35 வீதமானோருக்கு, உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டு ள்ளமை, அண்மையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாக, சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்தத் தகவல் கிடைத்துள்ளதாக, சுகாதார அமைச்சின் தொற்றா நோயப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சம்பிகா விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.

உணவில் சேர்க்கும் உப்பின் அளவு அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

நபர் ஒருவர், நாளொன்றுக்கு, ஒரு மேசைக் கரண்டி அளவான உப்பையே உணவில் சேர்க்க வேண்டும் என்பதே பரிந்துரைக்கப்பட்ட அளவாகும். எனினும், மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 3 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், உளவியல் தாக்கம், சிறுநீரக நோய்த்தாக்கம் உள்ளிட்ட காரணங்களும், உயர் இரத்த அழுத்தத்திற்கு காரணமாகும். எனவே, பொதுமக்கள் உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலம், உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பெயர்மாற்ற அறிவித்தல்

பருத்தித்துறை 12 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் 18.09.2008 இல் பிறந்த எமது மகனாகிய **நிறஞ்சன் கானுஜன்** என்பவரது பெயரை **நிறஞ்சன் விக்னேஷ்கர்** என பெயர்மாற்றம் செய்கின்றோம். எனவே இனிவரும் காலங்களில் இப் பெயரையே பயன்படுத்துவார் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**திரு.திருமதி.நிறஞ்சன் சாந்தினி**
**(பெற்றோர்)**

(15783)






## இராசிபலன்

05.06.2023
வைகாசி 22, திங்கட்கிழமை
பிரதமை முற்பகல் 7.54 மணிவரை
மூலம் பின்னிரவு 3.30 மணிவரை

சுபநேரம்-11.52-1.22 மணிவரை
இராகுகாலம்-7.22-8.52 மணிவரை
வற்றாப்பளை அம்மன் பொங்கல்
திருஞான சம்பந்தர் குருபூசை

சந்திராஷ்டமம்-
ரோகினி

**வளவன்**

**மேஷம்** — வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்** — பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும் நாள், பகையொன்று நட்பாகலாம், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** — குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**ரிஷபம்** — மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தேவையற்ற விரயங்கள் ஏற்படும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**சிம்மம்** — அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் கூடும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்** — சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கூடும், வாக்கு மேன்மையுண்டு, எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** — குடும்ப மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** — சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** — சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதம் தான் மனித குலத்திற்குப் பொதுவான உலக மொழி.

# கிளிநொச்சி கௌதாரிமுனை பிரதான வீதியை புனரமைப்பு செய்ய 3000 மில்லியன் தேவை

(கண்டாவளை).

கிளிநொச்சி கௌதாரி முனை பிரதேசத்திற்கான பிரதான வீதியை புனரமைப்பதற்கு சுமார் மூவாயிரம் மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பழைமை வாய்ந்த கிராமங்களாக காணப்படுகின்ற கௌதாரிமுனை, வினாசியோடை, மண்ணித்தலை உள்ளிட்ட கிராமங்களுக்கான ஒரே ஒரு போக்குவரத்து பாதையாக காணப்படுகின்ற கௌதாரிமுனை பூநகரி பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியூடாக போக்குவரத்து செய்யும் மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுமார் 17 கிலோமீற்றர் வரையான குறித்த வீதியானது புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. கௌதாரி முனை மற்றும் வினாசியோடை ஆகிய பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் வீதியூடாக பயணம் செய்ய முடியாத நிலையில் யாழ்ப்பாணம் குருநகரில் இருந்து படகு மூலமே சென்று தமது கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த வீதியை புனரமைத்து தருமாறு கடந்த 12 ஆண்டுகளாக பலதரப்புகளாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்ற போதும் இதுவரை அதன் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இது தொடர்பில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீதி புனரமைப்புக்கு இரண்டாயிரத்து ஐநூறு மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிலையில் தற்போதைய பொருட்களின் விலையேற்றம் காரணமாக கடந்த முதலாம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 3,000 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசத்தில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்கான வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ள நிலையில் குறித்த வீதியை நிரந்தர வீதியாக புனரமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-315)

# சர்வ மதக்குழுவினரின் ஏற்பாட்டில் நாவற்குழியில் பொசன் நிகழ்வு



(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட சர்வமத செயற்குழுவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நாவற்குழி புகையிரத நிலையம் முன்பாக பொசன் பண்டிகை சிறப்பு நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களும் கலந்து கொண்டு வெளிச்ச வீடுகளை வைத்து பொசன் விழாவினை சிறப்பித்திருந்தனர். (நி-30)



இலங்கை சிறைச்சாலை திணைக்களத்தின் 100 ஆவது சிறைச்சாலை பாதுகாவலர் அணியினரின் (யாழ்ப்பாணம் சிறைச்சாலை) 8 வருட சேவைக்கால பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் இரத்த தான முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்- சுபேசன்)

## தொழில் நுட்பவியல் கல்லூரியின்

# குறுங்கால இலவச கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பவியல் கல்லூரியில் NVQ சான்றிதழ் தர குறுங்கால கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அலுமினியம் பொருள் உருவமைத்தல் தொழில்நுட்பம், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், மோட்டார் வாகன வர்ணம் பூசுதல் தொழில்நுட்பம், கணிய அளவை உதவியாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ,கணனி கிராபிக் வடிவமைப்பாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயில விரும்புவோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் மேலதிக . விபரங்களுக்கு 021 222 2358, 021 221 2403 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அந்நிறுவனத்தின் மேலதிக பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டிய ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி இடம்பெறும் ஆய்வரங்கில் பங்குபெற விரும்புபவர்களிடம் இருந்து ஆய்வு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரிய கல்வி என்ற தொனிப்பொருளில் அமையுமாறு ஆய்வுக்கட்டுரை முன்மொழிவுகளை ஏ4 தாளின் ஒரு பக்கத்தில் அமையுமாறு யுனிகோட்டில் தட்டச்சு செய்து எதிர்வரும் 30.06.2023 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ktcresearch 2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரம் தேவைப்படுவோர் 0770761177 என்ற தொடர்பிலக்கத்தில் ஆய்வரங்க இணைப்பாளர் விரிவுரையாளர் சி.மனோகரனுடன் தொடர்பு கொள்ளுமாறும் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார். (நி)

# இலவச யோகாசன வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தினால் இலவச யோகாசன வகுப்புக்கள் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் காலை 7 மணி தொடக்கம் 9 மணிவரையும் மற்றும் புதன் கிழமைகளில் மாலை 5 மணி தொடக்க்ம் மாலை 7 மணிவரை யாழ்ப்பாண கலாசார நிலையத்தில் நடத்தப்படுகின்றன. அனுமதிகள் மற்றும் மேலதிக தகவல்களுக்கு 021 222 0505 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்வு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300 |
| தக்காளி | 350 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| கோவா | 450 | 400 | 450 | 400 |
| கரட் | 300 | 350 | 420. | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 250 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 140 | 140 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 240 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 250 | 250 | 250 |
| லீக்ஸ் | 350 | 380 | 420 | 450 |
| பீற்றூட் | 450 | 400 | 300 | 600 |
| கறிமிளகாய் | 450 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 900 | 700 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 300 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 70-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 600 | 800 |
| முள்ளங்கி | 140 | 180 | — | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 40 |
| ஈரப்பலா | 120 | 160 | — | 160 |



குருநகர் புனித அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம் பெற்றது.

(படம்- ஏர்ணஸ்ற்)



கரவெட்டி மேற்கில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் எல்லாம் குளம் இராணுவ பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை சிரமதானம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனிற் காலத்தில் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இளவேனில் என்பது வெப்பகாலத்தின் தொடக்கம் (Mid April to Mid June). இது பின் பனிக்காலத்திற்கு அடுத்தபடியாக வருகின்றது. பின்பனிக்காலத்தில் இயல்பாகவே உடலில் தப ஆற்றல் உயரத்திருக்கும்.

இதனால் அக்காலத்தில் மார்பிலும் வயிற்றிலும் கோழை (சளி போன்ற பொருள்) அதிகமாக உருவாகும். அக்காலத்தில் உருவான கோழை 4 இளவேனில் க்காலத்திலும் உடலில் தங்கியிருக்கும்.

அக்கோழையின் வேகம் சற்று அதிகமாகி மார்பில் சளிக்கட்டியினையும் பசி மந்தத்தையும் ஏற்படுத்தும். பசி குறைவாலும் செரிமானக் குறைவாலும் உடலில் உயிர்ச்சத்து குறைபாட்டை உண்டாக்கி உடல் சோர்வையும் மனச்சோர்வையும் ஏற்படுத்தும்.

மேலும் இளவேனில் காலத்தின் நடுப்பகுதியிலும் பின்பகுதியிலும் உடம்பின் நீர்சத்து குறைந்து தோல் வறட்சி, கண்வறட்சி, நாவறட்சி ஏற்படும். தோல் அரிப்பு, கண் எரிச்சல் வாய்ப் புண்கள் உருவாகும். சிறுநீர் எரிச்சலும் மறைவிடங்களில் தோல் வெடிப்பும் ஏற்படும்.

முடி உதிர்தல், பொடுகு பிரச்சினைகளும் ஏற்படும். சூழலில் குளிர்ச்சி மாறி, வெப்பம் அதிகரிப்பால் மனதிலும் இனம்புரியாத கவலை, பதற்றம், வெறுப்பு ஏற்படுவதுடன் செய்யும் வேலையில் ஈடுபாடற்ற நிலையும் உருவாகும்.

### இளவேனில் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை

1. பின்பனிக்காலத்தில் உடலில் உருவான அதிகபடியான கப ஆற்றலை நீக்க வாந்தி மருத்துவம், நசிய மருத்துவம் மேற்கொள்ள வேண்டும். இதனால் மார்பும் வயிறு குடல் பகுதிகளும் தூய்மையாகி மந்த நிலை மாறி பசி ஆர்வம் கூடும்.

ஜீரணம் சிறப்பாக நடக்கும். உடலிற்கு தேவையான ஆற்றல் இயல்பாக கிடைப்பதோடு மன அழுத்தம் மாறி மன ஆற்றல் மேம்படும்.

2. வாரம் இரு முறை எண்ணெய்க் குளியல் செய்ய வேண்டும். நல்லெண்ணையுடன் சீரகம், ஓமம், சிறிய வெங்காயம் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயைப் பயன்படுத்துவதால் இளவேனில் கால உடல் கேடுகள் நீங்கும்.

3. காலையில் நீரோ, நீராகாரமோ, மோரோ பருக வேண்டும். அதனுடன் சீரகம், அதிமதுரம் (நாட்டு மருந்து கடைகளில் உள்ளது) பொடி அரை தேக்கரண்டி அளவு சேர்த்து கொள்ளலாம். நீர் பற்றாக்குறைவினால் ஏற்படும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாக்க இது மிகுந்த பலனளிக்கும்.

4. கசப்பு காரம், துவர்ப்புச் சுவையுடைய பொருட்களை உணவில் அதிகம் சேர்த்து கொள்ள வேண்டும்.

5. மண்பானையில் நீர் விட்டு அதனுடன் சந்தன தூள் அல்லது வெட்டி வேர் அல்லது நன்னாரி வேர் சேர்த்து ஊற விட்ட நீர் சிறந்தது. இந்த வீரை 1 லீற்றருக்கு 5 மில்லி லீற்றர் அளவு தேன் சேர்த்துப்பருகினால் இக்காலத்திற்கு உகந்ததாயிருக்கும்.

6. "புனல் விளையாட்டும் பொழில் விளையாட்டும் நன்மையுண்டாக்கும்" என சித்தர் பாடல் குறிப்பிடுகின்றது.

அதாவது தூயநீர் நிலைகளில் நீந்தி விளையாடுவதும் சிறிது நேரம் உடல் குளிரும் படியாகக் குளிப்பதும் உடலிற்கும் மனதிற்கும் நல்லது. அதே போல மலர்கள் அதிகமாயிருக்கும் பூந்தோட்டங்களில் சிறிது நேரம் தங்குவதும் விளையாடுவதும் நன்மையுண்டாக்கும். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இவ்விடங்களுக்குச் சென்று வர வேண்டும்.

7. சந்தனம் சேர்த்த எண்ணெய் தலைக்கு தடவ வேண்டும். தூய சந்தனம் இல்லையெனில் சீரகம் சேர்த்துக் கொள்ளலாம். உடலிலும் சிறிது பூசிக்கொள்ளலாம்.



8. இரவு உறங்கும் முன் அல்லது ஓய்வாக இருக்கும் போது பாதத்தில் எண்ணெய் தேய்க்க வேண்டும். இது உடலை குறிப்பாகக் கண்களை குளிர்ச்சியாக வைத்து கொள்ள உதவும்.

9. மருதாணி அரைத்துப் பாதத்திலும் உள்ளங்கைகளிலும் வைத்துக் கொள்ளலாம்.

10 திராட்சை, பனை வெல்லம் தேன் கலந்த கலவை சிறந்த ஊட்டத்தைக் கொடுக்கும். பதநீர், நுங்கு, இளநீர், கரும்புச்சாறு, பழச்சாறுகள் நன்மையுண்டாக்கும்.

11. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மரநிழலில் அமர்ந்திருக்க வேண்டும்.

### தவிர்க்க வேண்டியவை

1. எளிதில் செரிக்காத உணவுகள், அதிகம் புளிப்புள்ள உணவுகள், குழகுழப்புத் தன்மையுடைய உணவுகளைத் தவிர்க்க வேண்டும். இவை பசி மந்தத்தை உண்டாக்கும். எனினும் மா, நெல்லி, எலுமிச்சையில் உள்ள புளிப்புத் தன்மை வயிற்றுக்குள் சென்று இனிப்பாக மாறிவிடும். உடல் ஊட்டத்தையும் கொடுக்கும். ஆதலினால் அவற்றை சேர்த்து கொள்ளலாம்.

2. பகல் தூக்கம், இரவு கண் விழித்தல் போன்றவற்றால் உடல் வெப்பமும் வறட்சியும் கூடி இக்காலத்தில் பல கேடுகளை விளைவிக்கும்.

3. உப்பு குறைத்து பயன்படுத்த வேண்டும்.

4. கடுமையான உடல் உழைப்புக் கூடாது.

5 அதிக சூட்டுடன் உணவை உண்ணக்கூடாது. அதிக குளிர்ச்சியுடைய உணவுகளையும் தவிர்க்க வேண்டும்.

### அதிகாலை எழுவதால் ஏற்படும் நன்மைகள்

1. புத்துணர்வு, மனத் தெளிவு, உயர்ஞானம் நேர் மறையான எண்ணம் ஏற்படும்.

2. படபடப்பு, பதட்டம் மன அழுத்தம் எதிர்மறையான எண்ணங்கள் நீங்கும்.

3. உடல் கழிவுகள் முழுமையாக உடலை விட்டு நீங்கும். உடலில் கலந்துள்ள நச்சுக்கள் வெளியேறும்.

4. உடலின் வளர்சிதை மாற்றங்கள் சீராகும்.

5. காலையிலேயே சீரண உறுப்புக்கள் சீராகச் செயற்படத் தொடங்கும். உணவின் நுண் ஊட்டங்கள் முழுமையாக உட்கிரகிக்கப்படும்.

6. கண்பார்வை தெளிவாகும்.

7. இரவில் விரைவாக உறங்கி அதிகாலை எழுபவர்களுக்கு உடல் பருமன் ஏற்படுவதில்லை. உடல் வாகு பாதுகாக்கப்படுவதால் உடல் சோர்வு, உடல் வலி ஏற்படுவதில்லை.

8. மூச்சுப்பாதையில் உள்ள நச்சுப்பொருட்கள், தூசுகள், கிருமிகளின் கழிவுகள் அதிகாலை எழுவதால் வேகமாக வெளியேற்றப்படுகிறது. இதனால் மூச்சுப் பாதையில் ஏற்படும் நோய்களிலிருந்து விடுபட முடியும்.

9. அதிகாலை உடலும் சுற்றுப்புறச் சூழலும் ஒத்து இயங்குவதால் சிறந்த நன்மைகள் உண்டாகும். முக்கியமாக அதிக பிராணவாயு உட்கிரகிக்கப்படும்.

10. அதிகாலை எழுவதால் உடலின் இயக்கு நீர்கள் (Hormones) செயற்பாடு சீராவது ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், உடல் உறுதிப்படும்.

11. அதிகாலை எழுவது முச்சுப்பயிற்சி உடற்பயிற்சி, ஆசனப்பயிற்சி, தியானப் பயிற்சி போன்ற பயிற்சிகள் செய்வதற்கு அடிப்படையாகின்றது.

12. ஒரு நாளின் முக்கிய நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல், திட்டமிடுதல், சிறந்த குறிக்கோளை வகுத்தல் போன்றவற்றிற்கு அதிகாலையே சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 196





"அம்மா! அகில புவனமும் உய்ய ஆனந்த நடனமாடும் பெருமானுக்கு அரங்கமும் அம்பலமும், சிற்சபையும் பொற்சபையும் மாடக் கோயிலும் மதில் சூழ்ந்த மாளிகையும் வேண்டும். ஓயாமல் தூங்குகிற திருமாலுக்கு ஒரு சிறிய இடம் போதாதா? தீபம் இல்லாத இருட்டறைதானே அவருக்கு வேண்டும்? மாடக் கோயில்களும் கற்றளிகளும் என்னத்திற்கு?" என்றார் ஈசான சிவ பட்டர்.

"அண்ணா! ஓயாமல் தூங்கும் பெருமாள்தான் உலகளந்த பெருமாள்! மகாபலியைப் பாதாளத்தில் அழுத்திய பெருமாள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படிப்பட்ட உலகளந்த பெருமாள் எங்கள் சிவபெருமானுடைய பாதார விந்தங்களைத் தரிசிப்பதற்குத் தோண்டித் தோண்டிப் பாதாளம் வரையில் சென்றும் எம்பெருமான் பாதங்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை!" என்றார் ஈசான சிவபட்டர்.

"உங்கள் சிவன் அவ்வளவு பெரியவராயிருந்தால், அவருக்குக் கோயில் எதற்கு என்று தான் கேட்கிறேன். கோயிலுக்குள் வரும்போது அவர் தலை இடித்துக் கோயில் இடிந்து விழுந்து விடுமே!" என்று சொன்னான் ஆழ்வார்க்கடியான்.

மழவரையர் திருமகள் இதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே, "உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்துங்கள். திருமலை! நீ சொல்வது என்ன? பெருமாளுக்குக் கோயில் கட்டக் கூடாது என்று யார் சொன்னது? எந்த ஊர் விண்ணகரத்தைப் புதுபிக்க வேண்டும் என்கிறாய்? அதை நல்ல முறையில் சொல்லுவதுதானே?" என்றார்.

"அம்மணி! தங்களுடைய மாமனார், மூன்று உலகும் கீர்த்தி பெற்ற பராந்தக சக்கரவர்த்தி. அவருடைய பட்டப் பெயரால் விளங்கும் வீரநாராயணபுரத்துக்குப் போயிருந்தேன். அங்கே வீரநாராயணப் பெருமாள் அல்லும் பகலும் தூங்காமல், கண் மூடாமல், மாகடல் போன்ற வீரநாராயண ஏரியைக் காத்து அருள் புரிந்து வருகிறார். அத்தகைய பெருமானுடைய கோயிலில் செங்கல் சுவர்கள் இடிந்து விழுந்து வருகின்றன. கோயில் இடிந்தால் ஏரிக் கரையும் இடிந்து நூறு நூறு ஊர்கள் பாழாகிவிடும். வீரநாராயணப் பெருமாளின் கோயிலைக் கற்றளியாக்கித் திருப்பணி செய்ய வேண்டும்!" என்றான்.

"ஆகட்டும், செய்வோம்! அதைப் பற்றி விவரமாக என்னிடம் சொல்! இவர்கள் எல்லாரும் இப்போது போகட்டும்!" என்று சோழகுல மூதாட்டி கூறினார்.

அந்தக் குறிப்பை உணர்ந்து ஈசான சிவபட்டர் உட்பட அனைவரும் வெளியேறிச் சென்றார்கள்.

உடனே, செம்பியன் மாதேவி குரலைத் தாழ்த்திக் கொண்டு, "திருமலை! யாத்திரையில் எங்கெங்கே போயிருந்தாய்? என்னென்ன பார்த்தாய்? என்னென்ன கேள்விப்பட்டாய்? விவரமாய்ச் சொல்லு! ஏதோ முக்கியமான விஷயம் கொண்டு வந்திருக்கிறாய். அதனால் தான் அப்படிக் குறுக்கிட்டுப் பேசினாய், இல்லையா?" என்று சொன்னார்.

"ஆம், தாயே! முக்கியமான விஷயம் பல கொண்டு வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் திருவுள்ளத்தை நோக்கிக் காத்திருப்பேன். ஆனால் காஞ்சியில் உள்ள இளவரசரைப் பற்றி ஏதோ சொல்லத் தொடங்கினீர்கள். அதற்காகவே தடை செய்தேன்.

சற்று முன் இங்கே இருந்தவர்களில் உண்மையானவர் யார், ஒற்றர் யார் என்று யாருக்குத் தெரியும்? நாட்டில் எத்தனையோ விபரீதங்கள் நிகழ்ந்து வருகின்றன.

எப்போது யாரால் என்ன துரோகம் நடக்கும் என்று சொல்வதற்கில்லை!" என்றான் திருமலையப்பன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## காத்துல போனதே இரகசியம்



ஆலமரத்தில் ராஜா, தேஜா என்ற இரு கிளிகள் வசித்து வந்தன. ஒருநாள் ராஜா இரை தேடச் சென்ற இடத்தில் வேடர் ஒருவர் அதன் இறக்கையின் மீது பலமாக கல்லெறிந்துவிட்டார்.

ஆனால் ராஜா கிளி வேடர் பிடியிலிருந்து தப்பித்து தன் இருப்பிடத்திற்கு வந்துவிட்டது! அதனால் இறக்கையை விரித்து பறந்து செல்ல முடியவில்லை.

தான் இரை தேடிச் செல்ல முடியாமல் மிகவும் அவதிப்பட்டது. ராஜா கிளியின் கஷ்டத்தை உணர்ந்த தேஜா கிளி "நண்பனே ! நீ இரை தேடச் செல்ல வேண்டாம். இந்த மரத்தில் அமர்ந்தபடியே ஓய்வெடுத்துக்கொள். நான் சென்று உனக்குத் தேவையான பழங்களை எல்லாம் பறித்து வருகிறேன்." என்று கூறியபடி மரத்தை விட்டு பறந்து அருகில் இருந்த பழத் தோட்டத்திற்குச் சென்றது.

ராஜா கிளிக்கும், தனக்கும் தேவையான பழங்களைப் பறித்த தேஜா கிளி தனது இருப்பிடத்திற்கு வருகின்ற பாதையில் ஒரு குயிலை சந்தித்தது. கிளியின் அலகில் பழங்கள் இருப்பதைக் கண்ட குயில் "கிளியக்கா .. கிளியக்கா - நான் பழம் சாப்பிட்டு ரொம்ப நாட்களாகின்றன.

எனக்கும் ஒரு பழம் தருகின்றீர்களா... ?" என்று அன்போடு கேட்டது. உடனே கிளியும் குயிலுக்குப் பழத்தைக் கொடுத்தது. அந்த பழத்தை சாப்பிட்ட குயில் "கிளியக்கா பழம் மிகவும் ருசியாக இருக்கின்றதே! இந்தப் பழத்தை எங்கிருந்து பறித்தீர்கள்?" என்று பணிவோடு கேட்டது.

கிளி தான் பழம் பறித்து வரும் இடத்தைப் பற்றி இது வரையிலும் யாருக்குமே தெரியப்படுத்தவில்லை. இப்போது இந்தக் குயில் கேட்பதால் அதனைத் தெரியப்படுத்தலாம் என்று முடிவு செய்தது.

உடனே குயிலைப் பார்த்து, "குயிலே ! இந்தப் பாதையின் வழியாக சற்று தூரம் பறந்து சென்றால் ஒரு பழத்தோட்டம் தென்படும். அந்தப் பழத் தோட்டத்தில் இருந்து தான் நான் பழங்களைப் பறித்து வருகிறேன் " என்று கூறியது.

உடனே குயில் அங்கிருந்து வேகமாகப் பழத் தோட்டத்தை நோக்கி பறந்து செல்லத் தொடங்கியது.

வழியில் இளைப்பாற வேண்டி ஒரு மரத்தில் அமர்ந்தது குயில். அப்போது மரத்திலிருந்த அணில் குயிலை சந்தித்தது.

"குயிலக்கா நலமாக இருக்கிறாயா ? உன்னைப் பார்த்து வெகு நாட்கள் ஆகின்றதே ! எப்படி இருக்கின்றாய்?" என்று அன்போடு கேட்டது.

உடனே குயில், "அணில் தம்பி, நான் நலமாக இருக்கின்றேன்.

இப்போது அருகே இருக்கும் பழத்தோட்டத்திற்குச் சென்று பழங்களை சாப்பிடச் செல்கிறேன்" என்று கூறியது. அதனைக் கேட்ட அணில் ஆச்சர்யமானது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்கு உரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காண முடியாது.
~பர்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மானியகால சமூகத்தை மறவாத யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்

ஒரு காலத்தில் நம் நாட்டில் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற ஒரு சில பல்கலைக்கழகங்களே இயங்கின.

அதனால் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதென்பது பெரிய விடயமாக இருந்தது.

அதிலும் இன்றிருக்கக்கூடிய எந்த வதிகளும் இல்லாத அந்தக் காலத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரையாற்றும்போது மாணவர்கள் எடுக்கின்ற குறிப்புக்களை மீளவும் எழுதிப் படிப்பது மற்றும் நூலகங்களுக்குச் சென்று புத்தகங்களை வாசித்து குறிப்பெடுப்பது என்பதாக அன்றைய பல்கலைக்கழகப் படிப்பு இருந்தது.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அதிகரித்துள்ளன.

இதையும் தாண்டி இலங்கை திறந்த பல்கலைக்கழகம் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இதைவிட தனியார் பல்கலைக்கழகங்கள் தாராளமாக வந்துவிட்டன.

அதிலும் தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை நிறைவு செய்கின்றவர்களுக்கு அதிக வேதனத்துடன் உடனடி வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

இதன் காரணமாக பல்கலைக்கழக அனுமதிகளையும் புறந்தள்ளிவிட்டு, தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு மாணவர்கள் தயாராகி விட்டனர்.

இவை தவிர, பட்டப்படிப்பு சார்ந்து ஏகப்பட்ட கற்கைநெறிகள் அறிமுகமாகியுள்ளன.

ஆக, உயர்தரத்தில் தகைமை பெற்ற எந்த மாணவனும் ஏதோவொரு பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதேநேரம் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டு பகுதிநேர வேலையிலும் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் முன்னைய காலங்களில் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்கள் வேலை செய்வது குற்றமாகக் கருதப்பட்டது.

தவிர, இன்றைய பட்டப்படிப்பு என்பது தகவல் தொழில்நுட்பத்தின் கீழ் வீடுகளில் இருந்தவாறு படிக்கக்கூடிய அரிய வாய்ப்புகளையும் தந்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறையின் இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்கள் மோதலில் ஈடுபட்டனர் என்ற செய்தியை அறிந்தபோது மிகுந்த அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டது.

இப்போதெல்லாம் பல்கலைக்கழக மாணவர்கள் மோதலில் ஈடுபடுவதேயில்லை.

அந்தளவுக்கு மாணவர்களிடம் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதென்பதுடன் அதையும் கடந்து படிப்பு, பகுதிநேர வேலை என வேகமான பயணிப்பு நடக்கிறது.

இதனால் முரண்படுவதற்கும் எதிர்வாதம் புரிவதற்கும் அடிதடியில் ஈடுபடுவதற்கும் நேரமேயில்லை.

இதுவே உலகம் முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் சமகால நிலை.

ஆனால் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மோதலில் ஈடுபடுகின்றனர் எனில் நாம் இன்னமும் மானிய கால சமூகத்தில்தான் இருக்கிறோமா என்று எண்ணத் தோன்றுகிறது.

# மீண்டும் ஆயுதப்போருக்கு வழி சமைத்து விடாதீர்கள்

## தமிழ்த் தலைவர்களிடம் அலிசப்ரி கோரிக்கை

(கொழும்பு)

**பிரிவினை கோரி தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையால் ஏற்பட்ட இழப்புக்களை நன்றாகவே உணர்ந்துள்ள தமிழ்த் தலைவர்கள், புலம்பெயர் தேசங்களில் உள்ள வர்களின் வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு சிக்கிக்கொண்டு மீண்டும் ஆயுதப்போருக்கு வழி சமைத்துவிடாதீர்கள் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்தியா ஒருபோதும் பிரிவினைக்கு அங்கீகாரம் வழங்காது என்ற யதார்த்தத்தினை புரிந்து கொண்டு முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இனப் பிரச்சினைகளுக்கான தீர்வு உட்பட அனைத்து விடயங்களுக்கும் பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வினை காண்பதற்கு தற்போது அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம்என்றவகையில் ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் சமத்துவமாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம். இந்த விடயத்தில் தமிழ்த் தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவரின் பிரதிநிதி

## இத் தீர்மானத்தில் உடன்பாடில்லை என்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதியாக இருப்பதால் அவரது பிரதிநிதியை நியமிப்பது உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் மயமாகுவதற்கு வழிவகுக்கும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில்பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்பதை உள்ளூராட்சி அமைச்சுக்கு எதிர்வரும் சில தினங்களில் எழுத்து மூலம் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

## 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களை சிறைகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலை வளாகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 16 முதல் 18 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் சிறுவர் குற்றவாளிகளை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஜெனீவா குழு இலங்கைக்கு வழங்கிய பரிந்துரைகள், சிறுவர் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் புதிய திருத்தங்களுக்கமைய அரசாங்கம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளது. தற்போது சிறைச்சாலையில் உள்ள சிறுவர்கள் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் நீதி அமைச்சுக்கு அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட 37 பேர், சிறைச்சாலை வளாகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் பிணை செலுத்த முடியாமல் சிறையில் இருப்பதும் தெரியவந்தது. (நி)

## வெப்பமான காலநிலையால் சிறுவர்களிடையே அதிகரிக்கும் தோல் நோய்கள்

(கொழும்பு)

தற்போது வெப்பமான காலநிலையால் சிறு குழந்தைகளுக்கு தோல் நோய்கள் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வரண்ட காலநிலையுடன் நீர்ப்போக்கு போன்ற நிலைமைகளும் குழந்தைகளிடம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சூரிய சக்தியில் இயங்கும் படகு; வல்வெட்டித்துறையில் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்னில் இயங்கும் இயந்திரபடகு முதல்முறையாக வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வெள்ளோட்டம் காட்டப்பட்டது.

சூரிய சக்தியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு 13 குதிரைவலுக் கொண்ட அதி உச்ச வேக இயந்திரத்தினைக் கொண்டு இயங்கும் மீன்பிடிப்படகு நேற்று வல்வெட்டிதுறை கடற்கரையில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

மண்ணெண்ணெய் பெற்றோல் டீசல் போன்ற எரிபொருட்களின் தேவை இல்லாமல் 'வெறுமனே சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு இயங்க வைக்கின்ற மோட்டார் இயந்திரம் மீன்பிடித் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ள விடயமாக எதிர்காலத்தில் அமையும் என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள், நிறுவன அதிகாரிகள், கடற்றொழிலாளிகள் முன்னிலையில் இந்த சூரிய சக்தியில் இயங்கும் மின்சார படகு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் பரீசீலனை செய்து காட்டப்பட்டது.

இவ்வாறான தொழில்நுட்ப விடயங்கள் உட்புகுத்தப்பட்டு உருவாக்கப்படுகின்ற தேவை கருதிய கண்டுபிடிப்புகள் அதனுடைய நீடித்து நிலைக்கும் தன்மையை பொறுத்து பாவனையாளர்கள் மத்தியிலே வரவேற்பை பெறும் என்பது வெளிப்படை உண்மை.

எதிர்காலத்தில் கடற்றொழிலாளிகளின் தேவைகள் இந்த இயந்திரங்களினால் பூர்த்தி செய்யப்படுமாயின், பாரிய எரிபொருள் பிரச்சினைகளில் இருந்து அவர்களை மீள வைக்கும் என்பது இங்கு வருகை தந்திருந்த பலரது கருத்தாகவும் அமைந்திருந்தது. (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

23

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



எமக்காக குரல் கொடுக்கும் தமிழக மக்களுக்கு, மீனவர் பிரச்சினையை வைத்து எங்களுக்கு எதிராக திசை திருப்புவதை அனுமதிக்க முடியாது.

அடி முறையை தடை செய்யுங்கள் இழுவை மடி மீன்பிடி முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்கள் என்றார்.

2017 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இழுவைமடி தடைக்கான பிரேரணை கொண்டுவரப்பட்டு அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இலங்கையைச் சுற்றியுள்ள கடற பகுதியில் மீன்பிடிக்க இழுவை மடிவலை மீன்பிடி முற்றையைப் பயன்படுத்தினால் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் இலங்கை மதிப்பில் ரூ.50,000 அபராதமும் விதிக்கப்படும் என்று அந்தச் சட்ட திருத்தம் தெரிவிக்கிறது.

இது இந்திய மீனவர்களைக் குறிவைத்து இயற்றப்படும் சட்டம் என்று கூறி விட முடியாது. ஏனெனில் இலங்கை மீனவர்களும் இப்போது மெல்ல மெல்ல இழுவை மடிவலை மீன்பிடிக்கும் முறைக்கு மாறத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழக மீனவர்களின் இழுவை மடிவலை மீன்பிடிப்புப் படகுகளுக்குத் தடை விதிப்பது போலவே, இழுவை வலை மூலம் மீன்பிடிக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இந்தச் சட்ட திருத்தம் பொருந்தும்.

இலங்கை அரசின் இந்த சட்ட திருத்தத்திற்கு உடனடி எதிர்வினையாக தமிழகத்திலிருந்து கவலையும் எதிர்ப்பும் எழுப்பப்படுகிறது. தமிழகத்திலிருந்து நூற்றுக்கணக்கான இழுவை மடிவலை மீன்பிடிப் படகுகள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடிக்கும் நிலையில், இந்தச் சட்ட திருத்தம் தமிழக மீனவர்களுக்கு எதிரானது என்று குரல் எழுப்பப்படுகிறது.

சட்டதிருத்தத்தின்படி இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதும் இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படுவதும் அதிகரிக்குமேயானால் அது இரு நாடுகளுக்கும் இடையே உள்ள இராஜதந்திர உறவுகளைப் பாதிப்பதுடன் கூட்டுக் குழுவின் செயற்பாட்டையும் பாதிக்கக் கூடும்.

இச் சட்டத்தின் பிரகாரம் இந்த மீன்பிடி முறை இலங்கையிலும் தடை செய்யப்பட்டது. ஆயினும் அரசியல் தலையீடுகள் காரணமாக (வாக்கு வங்கியை கருத்திற் கொண்டு) ஆறு மாதங்களின் பின் இந்த தடை நீக்கப்பட்டு அழிவு குறைவான இழுவை மடியினை இதற்கென ஒதுக்கப்பட்ட குறித்த ஒரு பகுதியில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இது ஒரு தவறான முடிவாகவே விமர்சிக்கப்பட்டது. கண்காணிப்பு இன்மை, முகாமைத்துவமின்மை காரணமாக இந்த ஒழுங்கு பின்பற்றப்படவில்லை. மாறாக மீண்டும் பழையபடியே இழுவைமடிச் செயற்பாடுகள் தொடர்கின்றன. அரசு இதை கண்டுகொள்ளவில்லை.

கடல்வளத்தை அழிக்கும் சுருக்கு வலை அல்லது இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு இலங்கை அரசு மட்டுமன்றி இந்திய அரசும் தடை செய்திருக்கிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு தமிழக அரசு சுருக்குமடி மற்றும் இரட்டை மடி வலைகளைத் தடை செய்திருந்தது. ஆனால், இந்த வலை ம்ற்றும் அதற்கான பெரிய படகு என சுமார் ஒரு கோடி ரூபாய் வரை இதற்காக முதலீடு செய்திருப்பதாக அரசிடம் முறையிட்டனர். அதனால் மூன்று வருடம் வரை விலக்கு அளிக்கப்பட்டு அந்த காலகட்டம் வரையிலும் சுருக்கு மடி, இரட்டை மடி வலையைப் பயன்படுத்திக் கொள்ள அதிகாரபூர்வமற்ற முறையில் அனுமதியும் வழங்கப்பட்டது.

தமிழக அரசின் அறிவித்தலின் படி 2016 ஆம் ஆண்டுக்குப் பின் சுருக்கு வலையைப் பயன்படுத்த கூடாது. ஆனால் இன்றுவரை செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளின் பின்னணியில் சுருக்குவலையை பயன்படுத்தி வருகின்றனர். இத்தடையை 2018 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றமும் உறுதிப்படுத்தியது.

தமிழக அரசின் தடை உத்தரவு, சென்னை உயர்நீதிமன்றின் தடை உத்தரவு, இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் அனைத்தையும் மீறி வடபகுதி கடற்கரையின் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வந்து கடல்வளத்தை சூறையாடி செல்கின்றனர்.

### தமிழக மீனவர்கள் கூறுவதென்ன?

தமிழகத்தை பொருத்தமட்டில் அந்தக் காலத்தில், தமிழக - இலங்கை மீனவர்கள், இருநாட்டு எல்லையிலும் பாரம்பரியமாக மீன்பிடித்தனர். கச்சதீவு, கக்கடதீவு, நெடுந்தீவில் தங்கி, வலையை உலர்த்தி, உணவு, தின்பண்டங்கள் பரிமாறி, தொப்புள்கொடி உறவை வளர்த்து உள்ளனர் என்று கூறப்படுகிறது.

அறிவியல் வளர்ச்சி, மக்கள் தொகை பெருக்கத்தால், தமிழகத்தில் படகுகள் எண்ணிக்கை அதிகரித்தது. மீன்பிடி முறையும் மாறியது. 1964 இல், இந்தியா - நோர்வே மீன்பிடித் திட்டத்தின் கீழ், நவீன மீன்பிடி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கடலடியில் சகதியில் வாழும் மீன்களைக் கூட, அள்ளி வரும் வலையான, நவீன இழுவலையை பயன்படுத்தினர்.

இதனால், தமிழக கடலோரத்தில், மீன்வளம் அழிய துவங்கிய தன் விளைவாக, 60 சதவீத தமிழக மீனவர்கள், இலங்கை கடலில் மீன்பிடிக்க துவங்கினர். 1984 - 85ல், இலங்கையில், உள்நாட்டு போர் தீவிரமடைந்தது. தலைமன்னார் முதல் கிளிநொச்சி வரை இருந்த தமிழ் மீனவர்கள், அங்கிருந்து வெளியேறி, தமிழகத்தில் அகதியாக தஞ்சம் அடைந்தனர். இதனால், வெற்றிடமாக இருந்த இலங்கை கடலில், 90 சதவீத தமிழக மீனவர்கள், அச்சமின்றி மீன்பிடிக்கத் துவங்கினர்.

அதுமட்டுமல்ல வேதாளை மீனவ கூட்டுறவுச் சங்க முன்னைய தலைவர், சீனி முகமது கபீர் கூறிய கருத்தொன்று இங்கு பதிவிடப்படுகிறது. மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கை தமிழர்களில் மீனவர்களும் இருந்தனர். வாழ்வாதாரம் வேண்டி, நம் மீனவர்கள் சார்பில், அப்போதைய கலெக்டரிடம் முறையிட்டனர். கலெக்டர் அனுமதிப்படி, ஒரு விசைப்படகில் நான்கு இந்திய மீனவர்களும் ஒரு இலங்கை அகதியும் சென்றனர். அவர்கள் தான் கச்சதீவை கடந்து, இலங்கையில் இறால் வளம் மிகுந்த பகுதிகளை காண்பித்து கொடுத்தனர். சில ஆண்டுகளுக்கு பின், இலங்கை திரும்பிய அவர்கள், அந்நாட்டு எல்லையில் தமிழக மீனவர்கள், மீன் பிடிப்பதால், மீன்வளம் பாதிப்பதாக போராடுகின்றனர். இவ்வாறு, அவர் கூறினார்.

இலங்கை கடற்படை மட்டுமல்லாமல், இப்போது இலங்கை வடமாகாண மீனவர்களாலும் தாக்குதலை சந்திக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. கச்சதீவு பக்கம்கூட தமிழக மீனவர்களால் மீன்பிடிக்க செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை தமிழர் மீனவர்களும் தமிழ் தேசிய கூட்டணி எம்.பி.க்களும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கூறும் தமிழக மீனவர்கள், தம்முடைய கடற்பகுதி மிகக் குறுகிய கடற்பகுதியாக இருப்பதால், தமது மீனவர்கள் இலங்கை கடற்பகுதிக்குள் நுழைய நேரிடுகிறது என்கின்றனர்.

ராமேசுவரத்திலிருந்து 12 கடல் மைல் தூரத்தில் சர்வதேச எல்லை வந்து விடுகிறது. முதல் 3 கடல் மைல் தூரத்துக்கு பாரம்பரிய நாட்டு படகுகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. விசைப்படகுகளுக்கு அனுமதி கிடையாது. 4 முதல் 7 கடல்மைல் தூரத்துக்கு கடலில் பாறையிருப்பதால், நமது மீனவர்கள் அதை தாண்டித்தான் மீன்பிடிக்கச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆக, 8 ஆவது கடல்மைல் எல்லையில் தொடங்கி சற்றுதூரம் சென்றவுடனேயே சர்வதேச கடல் எல்லை வந்து, அதற்கு அடுத்தாற்போல் இருக்கும் ஆழம் அதிகமான சகதி நிறைந்த பகுதிகளில் கிடைக்கும் இறால், மீனை பிடிக்கும் போதுதான், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர்.

இதைத் தவிர்க்க, மத்திய அரசாங்கம் "நீலப்புரட்சி" திட்டத்தின் கீழ் கடலில் தொலைதூரத்துக்கு சென்று மீன்பிடிக்க 2 ஆயிரம் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை மானியத்துடன் வழங்க முடிவெடுத்தது. ஆனால், 3, 4 ஆண்டுகள் ஆகியும் இதுவரை 31 படகுகள் தான் மீனவர்களின் பயன்பாட்டில் இருக்கிறது. இதற்குக் காரணம், 'அரசாங்கம் கொடுக்கும் மானியம் போதாது. மீதமுள்ள தொகையை எங்களால் சொந்தப் பணம் போட்டு கட்ட முடியாது' என்பதுதான் மீனவர்களின் ஆதங்கமாகும்.

ஆழ்கடல் படகுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை ரூ.1 கோடியே 20 லட்சமாகும். இதில் 50 சதவீத தொகையை மத்திய அரசாங்கமும் 20 சதவீத தொகையை தமிழக அரசும் 20 சதவீத தொகையை பயனாளிகளும் பகிர்ந்துகொள்வார்கள். மீதமுள்ள 10 சதவீத தொகையை வங்கி கடன் மூலம் பெற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும். ஆனால், ஆழ்கடல் மீன்பிடி படகைக்கட்டி, எல்லா சாதனாங்களையும் கொண்டு கடலில் இறக்குவதற்கு மீனவர்களுக்கு மேலும் அதிக தொகை செலவாகிறது.

இது வசதி படைத்த மீனவர்களால் மட்டுமே முடியும். மேலும், இந்த திட்டம் ராமநாதபுரம், நாக பட்டினத்தில் உள்ள ஒரு பகுதி மீனவர்களுக்கு மட்டுமே செயற்படுத்தப்படுகிறது. இதை தமிழக மீனவர்கள் அனைவரும் பயன்படசெய்ய

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜேந்திரகுமார்...

அமைச்சர் டிரான் அலஸ் பணித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் கூட்டம் ஒன்றின்போது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தாம் துப்பாக்கியால் அச்சுறுத்தப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இந்த சம்பவம் தொடர்பில் இன்று நீதிமன்றில் அறிவிக்கவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (ம)

## டொலரின்...

லாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரூபாயின் பெறுமதி வலுவாக காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும், உண்மையில் டொலரின் விலை குறைந்துள்ளதாகவும் மக்கள் பட்டினியால் வாடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பாரியளவில் வரியை விதித்து அரசாங்கம் நிவாரணங்களை குறைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதாரம் மற்றும் கல்வித்துறை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்.பல்கலைக்...

சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் - கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி மோதலில் முடிந்தது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும் மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாக நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்த வொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இதேநேரம், மோதல் சம்பவத்தையடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-33)

## பயங்கரவாத...

நேரடியாக தாக்கம் செலுத்தும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## திருடர்களை...

ஒரு விடியலின் ஆரம்பம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் திஸ்ஸமஹாராம மோடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

220 இலட்சம் மக்களால் அல்ல, நாட்டின் வளங்களை அபகரித்த ராஜபக்ஷ ஆட்சியினாலே நாடு திவாலாகியுள்ளது எனவும், திருடர்களை நம்பியிருக்கும் ஒரு தலைவரால் திருடர்களை பிடிக்கும் பணியை செய்ய முடியாது எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாடு திவாலாகும் நிலையில் இருந்து மீள்வதற்கு எளிதான வழி கமிஷன், லஞ்சம் என கொள்ளையடித்த பணத்தை மீட்பதுதான்,

எனவே பண்டோரா பேப்பர்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோடிக்கணக்கான டொலர்களை மீட்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அந்த பணத்தை நாடு பெற விரும்புவதாகவும், ஆனால் திருடர்களால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதியின் அடித்தளம் நாட்டை அழித்த ராஜபக்ஷ குலத்தையும் அவர்களின் விசுவாசமான பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாப்பதே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார். (ம)

ராஜபக்ஷர்களுக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை முன்கூட்டியதாக அறிந்துள்ள காரணத்தால் தான் அரசாங்கம் தேர்தலை கண்டு அச்சமடைகிறது.

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாக பல விடயங்களை பெற்றுக்கொண்டுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு 246 கோடி ரூபா தேவை என தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த மார்ச் மாதம் ஏழாம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன "நிதி விடுவிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளேன். சாதகமான பதில் கிடைத்ததும் தேவையான நிதி விடுவிக்கப்படும்" என மார்ச் ஏழாம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தார். (ம)

## துணிவு...

ஒன்றை தாக்கல் செய்வோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டு மக்களுக்கு தேர்தல் மற்றும் அரசியல் முறைமை மீது நம்பிக்கை இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார். 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணித்ததை ஜனாதிபதி மறந்து விட்டார்.

தேர்தல் ஒன்றை நடத்தாமல் எந்த அரசியல் தரப்புக்கும் 50வீதபலத்தை பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு குறிப்பிட முடியும். தேர்தல் ஒன்றை நடத்தினால் நாட்டு மக்கள் ரணில்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1590
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 5 6 8 7 8 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1165
S 12 58 71 76
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.04 | சீட்டிழுப்பு இலக்கம் 3377
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Z 08 62 67 73
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1483
E 17 16 24 28 47

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.04
சீட்டிழுப்பு இலக்கம் 444
மீனம் 32 39 53 54 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/04
சீட்டிழுப்பு இலக்கம் 5135
B 1 3 1 4 0 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2109 | நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.04 | தினம் ஞாயிற்றுக்கிழமை
E 04 13 39 74
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,312,940/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.04
வெற்றி வாரம்: 4270
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,776,037.30
வெற்றி இலக்கங்கள் 04 16 47 62 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 332
சீட்டிழுப்பு திகதி 2023.06.04
கபிலம்
வெற்றி இலக்கங்கள் 03 09 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,002,160/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 6,013,854.40
திகதி 2023-06-04
வெற்றி வாரம் 3821
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 01 03 13 62 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,810,060/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 29 02 31 34 63
சுப்பர் இலக்கம்
1285
மஞ்சள்
2023.06.04 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 335,086,482.20
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 1935
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,053,035/-
வெற்றி இலக்கங்கள் 07 10 45 53 Q

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15774)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை

உரும்பிராயிலுள்ள பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

- கொர்த்து போடுபவர்
- றைஸ் போடுபவர்
- Waiter

குறிப்பு : தூர இடங்களில் வசிப்போருக்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். (C-6675)

077 407 8235

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் ஆண்/பெண்
- துப்பரவு பணியாளர் ஆண்/பெண்
- சிட்டை எழுதுநர் (கணனி) ஆண்/பெண்
- தேநீர் தயாரிப்பவர்

(15845)

076 166 1986

# எதிர்வரும் 3 மாதங்களுக்குள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சட்டமூலம்

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவு எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி இது குறித்து தெரிவிக்கையில்,

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதில் நாம் அதிகளவான சிரத்தையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அதன் அடிப்படையில் அந்த ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவினைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதனையடுத்து, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய கூட்டமொன்றை கூட்டுவதோடு, குறித்த சட்டமூலம் தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடல்களை நடத்தி, அனைவரின் கருத்துக்களையும் உள்ளீர்க்கவுள்ளோம்.

தொடர்ந்து பூரணமான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். இந்தச் செயற்பாட்டில் அனைத்து தரப்பினரையும் உள்ளீர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என்றார். (ம)

# இலங்கையர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் புற்று நோயாளர்களுக்கு பயன்படுத்தப்படும் ஊசிகளை சட்டவிரோதமாகப் பயன்படுத்தும் மற்றுமொரு அழகு நிலையம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

சினிமா நடிகைகள் மற்றும் சமூகத்தின் உயர்ந்த மக்களை குறிவைத்து குறித்த அழகு நிலையம் நடத்தப்படுகிறது.

புற்று நோயாளர்களின் பக்கவிளைவுகளைத் தணிக்கக் கொடுக்கப்படும் குளுதாதயோன் ஊசி மூலம் சருமத்தை ஒளிரச் செய்வதன் மூலம் செய்யப்படும் மோசடி தொடர்பில் கடந்த வாரம் தகவல் வெளியாகியிருந்த நிலையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜகிரிய பகுதியில் சுற்றிவளைக்கப்பட்ட சொகுசு அழகு நிலையத்தின் உரிமையாளர் சமூக வலைதளங்க ளில் மிகக் கடுமையாக விளம்பரப்படுத்தியிருந்ததையும் காணமுடிந்தது. (ம)

# திருவிழாவில் தீ விபத்து

## பூசாரி உயிரிழப்பு

அகலவத்தை தென்னஹேன முத்து மாரி அம்மன் கோவிலின் வருடாந்த தேர்த் திருவிழாவின் போது பூசாரி ஒருவர் தீ விபத்துக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இங்கிரிய பிரதேசத்தில் உள்ள கோவில் ஒன்றின் பூசாரி என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆசிர்வாதன் சுந்தர் குமரன் என்ற 44 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தீ விபத்துக்கான காரணம் இது வரை தெரியவரவில்லை. பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## குத்தகைக்கு தேவை

வான்/ கார் குத்தகைக்கு தேவை. தகுந்த பெறுமதி வழங்கப்படும். (15844)

077 971 5379

## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. (C-6670)

0768226240 / 0768226241

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Srilankan Visa Extension

இலங்கை விசா நீட்டித்து தரப்படும்




COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15843)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- வட்டுக்கோட்டை மாவடி சந்தியில் இருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் உடவில் வீதி பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 786 வழி இலக்க தனியார் CTB பேருந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200m தூரத்தில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- மாவடி சந்தியில் இருந்து 800m தூரத்தில்.

(15847)

076 739 0413
076 733 6093

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15847)

076 733 6047
076 755 8606

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1950 . 12 . 19

மறைவு 2021 . 05 . 28

அமரர்

## ஆறுமுகம் யோகராசா

(ஓய்வுபெற்ற முகாமையாளர், கிராமிய கூட்டுறவு வங்கி கொடிகாமம் தலைவர், எருவன் பிள்ளையார் ஆலயம்)

கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (15842)

குடும்பத்தினர்
077 087 3679

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.